செ.வெ.எண்: 815/2016 நாள்: 21.11.2016

# பத்திரிகை செய்தி

## பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேர்ந்து பயனடைவீர்

பருவநிலை மாறுபாடு, போதிய மழை இல்லாமை போன்ற சூழ்நிலைகளில் இருந்து விவசாயிகள் பாதிப்படைவதை தடுக்க பிரதம மந்திரி பசல் பிமா யோஜனா என்ற பயிர் காப்பீடு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு முன்பு இருந்த பயிர் காப்பீடு திட்டங்கள் போல் இல்லாமல் இந்த திட்டத்தில் விவசாயிகள் பயன்பெறும் பல புதிய அம்சங்கள் உள்ளன. நெல்பயிருக்கு பிர்க்கா அளவிலான மகசூல் கணக்கிடப்பட்டு அதன் அடிப்படையில் இழப்பீடு மதிப்பிடப்பட்டது. தற்போது வருவாய் கிராமம் அளவில் மதிப்பிடப்படுகிறது. இதனால் இயற்கை சீற்றம் மற்றும் மழை குறைவு போன்றவற்றின் பாதிப்புகளை முன்பைவிட துல்லியமாக மதிப்பிட முடியும். இதனால் அதிக விவசாயிகள் பயன்பெற வாய்ப்பு உள்ளது.

மேலும் மிக முக்கியமாக மழை குறைவு அல்லது மோசமான பருவநிலை போன்ற காரணங்களால் விதைப்போ, நடவோ செய்யமுடியாத நிலையில் காப்பீடு பகுதியில் உள்ள விவசாயிகளும் உரிய காலத்துக்குள் காப்பீடு பிரிமியம் செலுத்தியிருந்தால் காப்பீடு திட்ட விதிகளின்படி அதற்குரிய நிவாரணம் பெறலாம்.

நடவு செய்த பிற்கும் அந்த பகுதியில் எதிர்பாராத இழப்புகள் ஏற்பட்டால் காப்பீடு திட்ட விதிமுறைகளின்படி மதிப்பிடப்பட்டு இழப்பீடு கிடைக்க வாய்ப்பு உள்ளது.

தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் இயல்பைவிட குறைவாக பருவமழை பெய்துள்ளது. மேலும் மாவட்டத்தின் முக்கிய நீர் ஆதாரங்களான பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளிலும் தண்ணீர் குறைவாகவே உள்ளது. எனவே உடனடியாக மாவட்டத்தில் உள்ள அனைத்து நெல், வாழை மற்றும் மரவள்ளி பயிர் செய்யும் விவசாயிகளும் இந்த பிரதம மந்திரி பசல் பிமா யோஜனா என்ற பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேர்ந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

குத்தகை விவசாயிகளும் தாங்கள் பயிர் செய்வதற்கான வருவாய் துறை சான்றிதழ் பெற்று இத்திட்டத்தில் சேர்ந்து பயனடைய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இதற்கான முன்மொழிவு படிவம், பதிவுப்படிவம் உட்பட தேவையான ஆவணங்களை அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மைங்களிலும் வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலகங்களிலும் சமர்ப்பித்து பயன்பெறுமாறு விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

விவசாயிகள் தாங்கள் வங்கி கணக்கு வைத்திருக்கும் தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலோ, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் வழியாகவோ பிரிமியம் செலுத்தலாம்.

பிரிமியம் செலுத்துகையில் கடன்பெறா விவசாயிகள் முன்மொழிவு படிவம், பதிவு படிவம் ஆகியவற்றை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும். மேலும் முகவரி / அடையாள ஆதாரம் (ஆதார் அட்டை / பாஸ்போர்ட் / வாகன ஓட்டுநர் உரிமம் /

பான்கார்டு), வங்கி கணக்கு புத்தகத்தின் முன்பக்க நகல், வருவாய் துறை கிராம நிர்வாக அலுவலர் சான்று ஆகியவை இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

ஒம்/-சஜ்ஜன்சிங் ரா சவான்
மாவட்ட ஆட்சியர்
கன்னியாகுமரி மாவட்டம்

//ஆணைப்படி//

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்)

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.